# அலகு - 2

## செய்தித்தாளின் தோற்றமும் வளர்ச்சியும்

### அறிமுகம்

மக்களின் கவனத்தைக் கவரக் கூடியதும் சுவையானதும் அண்மையில் நிகழ்ந்ததும் அனைவரும் அறிந்து கொள்ளக் கூடியதுமான உண்மையான நிகழ்ச்சி பத்திரிகையில் வெளியிடும்போது அது செய்தி (News) என்று அழைக்கப்படுகின்றது.

'News' என்ற சொல்லில் உள்ள 'N' என்ற எழுத்து வடக்குத் திசையினையும் (North), 'E' என்ற எழுத்து கிழக்குத் திசையினையும் (East), 'W' என்ற எழுத்து மேற்குத் திசையினையும் (West) 'S' எழுத்து (South) தெற்குத் திசையினையும் குறிக்கின்றது.

உலகின் நான்கு திசைகளில் இருந்தும் செய்திகளைக் கொண்டு வருவதால் 'நியூஸ் பேப்பர்' (News Paper) என்று செய்தித் தாளுக்குப் பெயர் வந்தது என்பர்.

### எச். மாரிஸ்

"செய்தி என்பது அவசர அவசரமாக நிகழ்கின்ற வரலாறு ஆகும்" என்று கூறுகிறார் அமெரிக்கப் பத்திரிகையாளர் எச்.மாரிஸ்.

Scanned by CamScanner

## இந்தியப் பத்திரிகைப் பதிவுச் சட்டம்

"நாட்டு நடப்புச் செய்திகளையும் அவை பற்றிய கருத்துரைகளையும் உள்ளடக்கிக் குறிப்பிட்ட காலங்களில் அச்சடித்து வெளிவருவனவே செய்தித் தாள்கள் ஆகும்" என இந்தியப் பத்திரிகைப் பதிவுச் சட்டம் குறிப்பிடுகிறது.

# தொடக்கக் காலத்தில் செய்தி அனுப்பிய முறைகள்

## செய்தி அனுப்பிய முறைகள்

மொழி வளர்ச்சியின் அடுத்த கட்டமாய்த் திகழ்வது செய்தித் தொடர்பாகும். தன்னைப்பற்றி அறிந்து கொள்வதைக் காட்டிலும் பிறரைப் பற்றி அறியும் வேட்கையுடைய மனிதன் 'கூவியழைத்தல்', 'சீழ்கை ஒலித்தல்', 'சங்கு மணி' போன்றவற்றைக் கொண்டு ஒலி எழுப்புதல், சில இடங்களில் தீயம்புகளை வானத்தில் பாய்ச்சுதல் முதலானவற்றால் செய்திகளை அறிவிக்கும் நிலைகளை உருவாக்கினான்.

ஆப்பிரிக்கக் காடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த நீக்ரோக்கள் முரசறைந்து அக்குறிப்பினால் பல மைல்களுக்கு அப்பாலிருக்கும் தம் இனத்தவருக்குச் செய்திகளை அனுப்பினான். அமெரிக்க நாட்டுக் காட்டு மக்களிடையே புகை, நெருப்பு ஆகியவற்றை மூட்டி அவற்றின் மூலம் செய்திகளை அறிவிக்கும் முறையும் காணப்படுகின்றது.

நாட்கள் செல்லச்செல்லச் செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பறவைகளையும், மிருகங்களையும் பயன்படுத்தினர். செய்தி கொண்டு சென்ற பறவைகளில் குறிப்பிடத் தகுந்தவை புறாக்களேயாகும். இவற்றின் கால்களில் செய்திகள் அடங்கிய குறிப்பேட்டினைக் கட்டி அனுப்பி வைத்தனர். மிருகங்களில் குதிரையைக் கொண்டு அதன்மீது வீரர்கள் அல்லது பணியாளர்கள் ஊர்ந்து செய்திகளைப் பரப்புவதும் ஒருவகையாக இருந்திருக்கிறது.

## இலக்கண இலக்கியத்தில் செய்தி

பண்டைக்கால இலக்கண இலக்கியங்கள் செய்தி பரவும் நிலையினை மிகத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன. தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியலில் தலைமகன் கூற்றில்,

*'தூதிடை யிட்ட வகையி னானும்' (தொல். அகத் 987)*

எனத் தூதுபற்றிக் கூறும்.

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய தூது இலக்கியம் அன்னம், கிள்ளை, மயில், வண்டு, நாரை, புறா முதலான உயிருள்ள பொருட்களையும் மேகம், தென்றல், தமிழ், புகையிலை, பணம் நெஞ்சு முதலான உயிரற்ற பொருட்களையும் தூதுப் பொருட்களாகப் பயன்படுத்தியிருப்பதைக் கூறும்.

அக்காலத்தில் ஊர்ப் பொதுமன்றங்களில் முரசறைந்து செய்தி பரப்பும் நிலையினை,

Scanned by CamScanner

*"பறையறைத் தல்லது சொல்லற்க என்னா*
*இறையே தவறுடையான்"*

(கலித்தொகை குறிஞ்சி–20:32:33)

எனக் கலித்தொகை கூறும்.

இதனையடுத்து சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி திருமணத்தை நகரத்தே அறிவித்த செய்தியை,

*"யானை எருத்தது அணியிழையார் மேலிரீஇ*
*மாநகர்க் கீந்தார் மணம்"*

(சிலம்பு – மங்கல வாழ்த்துப் பாடல், 43–44)

எனக் கூறுகின்றது.

தன் நாட்டில் மட்டுமன்றி, வெளிநாட்டிலும் செய்தி பரவும் நிலையையும் சிலப்பதிகாரம்,

*"நாவலந் தன்பொழில் நண்ணார் ஒற்றுநம்*
*காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா*
*வம்பணி யானை வேந்தர் ஒற்றே*
*தஞ்செவிப் படுக்குந் தகைமைய வன்றோ*
*அறைபறை யென்றே அழும்பில்வேள் உரைப்ப"*

(சிலம்பு காட்சிக் காதை, 173–177)

என வஞ்சிக் காண்டத்துக் காட்சிக் காதையில் 'அறை பறை' முறை கூறும்.

பறையறைந்து அறிவிக்கும் செய்தி உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் பரவியது. எகிப்து நாட்டில் அடிமைகளின்மூலம் செய்தி பரப்பப்பட்டது. கிரேக்க நாட்டில் குதிரை வீரர்கள்மூலம் பரவியது.

ரோம் நகரில் அன்றாடம் நிகழ்ச்சிகளை எழுதிப் பொதுமன்றத்தில் ஒட்டி வைத்து செய்திகளைப் பரப்பினர். இதனை எழுத்தாளர்கள் எழுதி வேறு நகரத்தில் இருந்த அரசியல் வாதிகளுக்கும் வணிகர்களுக்கும் அனுப்பினர். அசோகர் காலத்தில் கோவில் சுவர்களில் ஓவியங்கள் வரைந்து செய்திகள் பரப்பப்பட்டன.

ஔரங்கசீப் காலத்தில் செய்திகளைச் சேகரிக்கும் செய்தியாளர்கள் "வாக்யா நாவிஸ்" (Vaquia Navis) என்றும், செய்திகளை மக்களுக்கு வழங்கும் செய்தியாளர் "சவானிக் நாவிஸ்" (Savanik Navis) என்றும் அழைக்கப் பெற்றனர். ஒற்றர்கள் 'கோஃபியா நாவிஸ்" (Cofia Navis) என்றும் அழைக்கப் பெற்றனர்.

பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டபொம்மன் முருகப் பெருமானிடம் பற்றுடையவன். திருச்செந்தூர் முருகனுக்கு நண்பகல் வழிபாடு முடித்த பின்னரே அவன் மதிய உணவு உட்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இதற்காக இவன் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து திருச்செந்தூர் வரை மண்டபங்கள் கட்டினான். வழிபாடு முடிந்ததும் ஒவ்வொரு மண்டபத்திலும் மணியடிக்க

ஏற்பாடு செய்திருந்தான். அவ்வாறே மணி ஒவ்வொன்றும் முறையாக ஒலிக்கப் பெற்றுச் செய்தி அறிந்து உணவு உட்கொள்ளும் வழக்கம் உடையவனாக இருந்தான்.

இதனைப் போன்றே மதுரை மாநகரைப் பேரும் புகழுடனும் ஆண்ட திருமலைநாயக்கர் ஒவ்வொரு நாள் இரவிலும் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்கு இரவு வழிபாடு முடிந்த பிறகு உணவு உட்கொண்டார். வழிபாட்டு செய்தியை அறிவதற்கு ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மதுரை வரை ஒருகல் தொலைவிற்கு ஒரு மண்டபம் கட்டி அந்த மண்டபத்தில் மணியினை ஒலிக்கச் செய்து செய்தியை அறிந்தார்.

## இந்திய இதழியல் - தொடக்க காலம்

இந்தியப் பத்திரிகை வரலாறு என்பது இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருப்பது போல ஒரு மொழி பத்திரிகை வரலாறு அல்ல; இது பலமொழி இதழ்களின் வரலாறு ஆகும். இந்தியப் பத்திரிகை ஒரு சார்ந்திருக்கும் பத்திரிக்கையாகத் தொடங்கப் பெற்றது. அது இப்பொழுது வளர்கின்ற சமுதாயத்தின் பத்திரிகையாக பல சவால்களுக்குப் பதிலளிப்பதாக மாறியுள்ளது என்று சலபதி ராவ் இந்திய இதழ்களின் வரலாறு பற்றிக் குறிப்பிடுகின்றார்.

## முதல் முயற்சி

நமது நாட்டில் தமிழில் வேத நூலை வெளியிட முதல் அச்சகத்தை 1713இல் தரங்கம்பாடியிலும் 1715இல் பொறையாறிலும் நிறுவினாலும், செய்தித்தாள் வெளியிடப்படவில்லை. கல்கத்தாவில் வில்லியம் பால்ட்ஸ் (William Bolts) 1768இல் முதன் முதலாக ஒரு செய்தித்தாள் தொடங்க முயன்றார். இருப்பினும் அடுத்த முயற்சி தொடர மேலும் பன்னிரண்டு ஆண்டுகளாயின.

## முதல் செய்தித்தாள்

1780ஆம் ஆண்டு சனவரி திங்கள் 29ம் நாள் முதல் இந்திய செய்தித் தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (James Augustus Hicky) என்பவர் வெளியிட்டார். இதழுக்கு வங்காள கெஜட் அல்லது கல்கத்தா பொது விளம்பரத்தாள் (Bengal gazette or Calcutta General Advertiser) என்று பெயரிட்டிருந்தார். தன்னைக் கிழக்கிந்திய நிறுவனத்தின் ‘முதல் முன்னாள் அச்சகர்’ என்று இதழில் அறிமுகப்படுத்திக் கொண்டார். இந்த இதழைப் பற்றி அவர் “எல்லாப் பிரிவினருக்கும் உரிய அரசியல் வாணிப இதழ்; யாராலும் ஊடுருவ இயலாதது” என்று விவரித்துக் கொண்டார்.

## தொடர்ந்து வந்த இதழ்கள்

1780ல் வங்காள கெஜட்டை ஹிக்கி தொடங்கியதைத் தொடர்ந்து பெர்னார்டு மெஸ்கிங், பீட்டா ரீடு என்ற இரு ஆங்கில வணிகர்கள் இந்திய கெஜட் (India Gazette) என்ற இதழை ஆரம்பித்தார்கள்.

Scanned by CamScanner

1784ல் 'கல்கத்தா கெஜட்' (Calcutta Gazette) 'வங்காள ஜர்னல்' (Bengal Journal) 'ஓரியண்டல் மேகசின்' அல்லது கல்கத்தா அமியூஸ்மெண்ட் (Oriental Magazine or Calcutta Amusement) என்ற மாத இதழும் 1786இல் கல்கத்தா கிராணிகிள் (Calcutta Chronicle) என்னும் இதழும் வெளிவந்தன.

## சென்னையில் இதழ்கள்

1785 முதன் முதலாக ரிச்சர்டு சான்சன் (Richard Johnson) 'சென்னை கூரியர்' (Madras Courier) என்ற ஆங்கில வார இதழை அரசின் ஆதரவோடு வெளியிட்டார். 1785ல் வில்லியம்ஸ் 'சென்னை கெஜட்' (Madras Gazette) என்ற இதழையும், ஹாம்ப்ரீஸ் (Hampreys) இந்தியன் ஹெரால்டு (Indian Herald) என்ற இதழையும் தொடங்கி நடத்தினர்.

1790ம் ஆண்டிற்குப் பின் இந்திய இதழ்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின. கல்கத்தாவில் ஆசியாடிக் மிர்ரர் (Asiatic Mirror) கல்கத்தா கூரியர், இந்தியன் அப்பல்லோ, பெங்கால் ஹாரகாரு (Bengal Harkaru 1785), டெலிகிராப் (Telegraph 1796), கல்கத்தா மார்னிங் போஸ்ட் (Calcutta Morning Post), ஓரியண்டல் ஸ்டார் (Oriental Star) – 1791, ரிலேட்டர் (1799) ஆகிய இதழ்கள் வெளிவந்தன.

1799ல் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்ற வெல்லெஸ்லியின் (Lord Wellesly) அடக்குமுறைக்கு ஆட்பட்டு அடுத்த 17 ஆண்டுகள் இந்திய இதழ்கள் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தன.

## பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய இதழியல்

வெல்லெஸ்லி காலத்து அடக்குமுறை கெடுபிடியின் விளைவாக சட்டத்திற்குப் புறம்பாக, தலைமறைவு நிலையில் ஆசிரியர், அச்சிடுபவர் பெயரில்லாமல் சில இதழ்கள் வெளிவந்தன. செராம்பூரிலிருந்து கிருத்துவ பாதிரிமார்கள் இந்து சமயத்தையும், முகமதிய சமயத்தையும் தாக்கும் நோக்கில் இத்தகைய இதழ்களை வெளியிட்டனர்.

## சுதந்திர வேட்கை

இதழ்களின் அடக்குமுறை இருந்ததாலேயே இதழ்களின் சுதந்திர வேட்கையும் இக்காலத்தில் எழுந்தது. அன்றைய சூழ்நிலைக்குக் காரணமான இருவர் பற்றி எம்.சலபதிராவ் மிகவும் அருமையாக, "ஜேம்ஸ் சில்க் பக்கிங் ஹாமும், இராஜாராம் மோகன்ராயும் அக்காலத்தில் மிகப்பெரிய இதழாசிரியர் களாவர். பத்திரிகை சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெறத் தோன்றிய பெரும் தீரர்களாவர்" என்று குறிப்பிடுகின்றார்.

## வளர்ச்சிக்கான சூழல்

இந்திய இதழ்களுக்குக் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் வளர்ச்சிக் கான சூழலும் தோன்றியது. 1880இல் 16 இந்திய மொழி இதழ்கள் வெளியாயின. அப்பொழுது, வங்காளத்தில் மட்டும் ஆங்கிலத்தில் 33 நாளிதழ்களும், பருவ இதழ்களும் வெளிவந்தன. 1831ஆம் ஆண்டிற்கும் 1833ஆம் ஆண்டிற்கும் இடையில் 19 புதிய செய்தித் தாட்கள் வெளிவந்தன.

Scanned by CamScanner

இந்திய மொழி இதழ்கள் வளர்வதற்கான வாய்ப்புகள் ஆக்லாண்ட் பிரபு (Lord-Auckland), எல்லன்பரோ பிரபு (Lord Ellenbourough), ஹடார்டிங்ஸ் பிரபு (Lord Hardings), டல்ஹௌசி பிரபு (Lord Dalhousie) ஆகிய தலைமை ஆளுநர்களின் ஆட்சிக் காலங்களிலும் (1836 முதல் 1856 வரை) தொடர்ந்தது.

## தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம்

இந்திய தமிழ் இதழ்களின் வளர்ச்சியால் மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. மக்களிடம் நாட்டுப்பற்று வளர்ந்ததால் ஆங்கிலேயே ஆட்சி ஆட்டம் காணும் எனக் கருதிய லிட்டன் பிரபு (Lord Lyten) இந்திய மொழி இதழ்களைக் கட்டுப்படுத்த 1878ல் தாய்மொழி பத்திரிகைச் சட்டத்தைக் (The Vernacular Press Bill) கொண்டு வந்தார். இதனை இந்தியர்கள் 'வாய்ப்பூட்டுச் சட்டமாகவே கருதினர். இவருக்குப் பின் ரிப்பன் பிரபு 1882இல் பழைய சட்டத்தை நீக்கிவிட்டு, இந்திய இதழ்களுக்கு அதிக உரிமைகள் வழங்கினார்.

1885 தோன்றிய 'இந்திய தேசிய காங்கிரஸ்' இயக்கம் இதழ்களின் வளர்ச்சிக்கு துணை செய்தது.

சென்னை ஹிந்து (The Hindu), சென்னை மெயில் (The Madras Mail) ஆகிய இதழ்கள் தோன்றின. வீரராகவாச்சாரியார், சுப்ரமணிய ஐயர் ஆகியோர் தமிழகத்தில் இதழியல் வளர அரும்பாடுபட்டனர்.

## இந்திய விடுதலை இயக்கமும் இதழ்களும்

இந்திய விடுதலை இயக்கத்திற்கும் இந்திய இதழ்களின் வளர்ச்சிக்கும் நெருங்கியத் தொடர்பு இருந்தது. மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், மக்களை ஒன்று திரட்டி, அரசுக்கு எதிராகப் போராடச் செய்யவும் தலைவர்கள் இந்திய இதழ்களையே பயன்படுத்தினர்.

விஷ்ணு கிருஷ்ண கிப்லாங்கர் மராட்டிய மொழியில் கேசரி '(Kesari)' என்ற இதழையும், ஆங்கிலத்தில் 'மராட்டா' (Mahratta) என்ற இதழையும் தொடங்கினார். மூத்ததேசிய தலைவரான பாலகங்காதர திலகர் பின்னால் இவற்றை ஏற்று நடத்தினார். 1907இல் தேசிய காங்கிரசில் பிளவு ஏற்பட்டபொழுது 'தக்காண சபையை' (Deccan Sabha) அமைத்தார். பத்திரிகை சுதந்திரத்திற்காக தொடர்ந்து போராடிய தலைவர்களில் இவர் குறிப்பிடத் தக்கவர்.

1909இல் மிண்டோ–மார்லி சீர்திருத்தங்களை மேற்கொண்ட பொழுதும், 1910ஆம் ஆண்டு இந்திய இதழ்கள் சட்டம் என்ற புதிய சட்டத்தின்மூலமும் இதழ்களை ஒடுக்க முயன்றனர்.

**காந்தியக் காலம் :** தென்னாப்பிரிக்காவில் இந்தியன் ஒபினியன் (Indian Opinion) இதழையும், நமது நாட்டில் 'யங் இந்தியா' (Young Indian), 'ஹரிஜன்' (Harijan), நவஜீவன் ஆகிய இதழ்களையும் உயர்ந்த குறிக்கோளோடும், தரத்தோடும், அறத்தோடும் நடத்தியவர் காந்தியடிகள்.

Scanned by CamScanner

இவர் காலத்தில் பழைய இந்திய இதழ்கள் புதிய தாக்கம் பெற்று வெளிவந்தன. நாடெங்கிலும் பல புதிய இதழ்கள் வளர்ந்தன. எடுத்துக்காட்டாக, பம்பாயில் ‘பம்பாய் கிரானிகள்’, சிந்துவில் டி.எல்.வாஸ்வானியின் ‘நியூ டைம்ஸ்’, மஹாராஜ் லோக்ராமின் ‘ஹிந்து’, ‘சென்னையில் திருமதி பெஷன்டின் ‘நியூ இந்தியா’, நீதிக்கட்சியின் ‘ஜஸ்டிஸ்’, டி.பிரகாசத்தின் ‘ஸ்வராஜ்யா’ (Swarajya) ஆகியன குறிப்பிடத்தக்கவை.

காந்தியடிகள் 1942 ‘வெள்ளையனே வெளியேறு’ (Unit India) இயக்கத்தை நடத்திய பிறகு பெரும்பாலான இதழ்கள் தேசிய இதழ்களோடு ஒன்றி நடைபோட்டன. நாட்டின் விடுதலை வேள்வித் தீயை வளர்த்து, நாடு விடுதலை பெற இதழ்கள் ஆற்றிய பங்கு தனி வரலாறாக விளங்குகின்றன.

## சுதந்திர இந்தியாவில் இதழ்கள்

சுதந்திர இந்தியாவில் முதல் தலைமை அமைச்சராக இருந்த பண்டிட் ஜவஹர்லால் நேரு பத்திரிகை சுதந்திரத்தை ஆதரித்து பத்திரிகைகள் வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கத் துணை செய்தார்.

இந்திய இதழ்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டித் துணை செய்யும் வகையில் இந்திய அரசு, ‘பத்திரிகை குழுவை’ (Press Commission) 1952இல் நியமித்தது. இக்குழுவின் அறிக்கை 1954ல் வெளிவந்தது. 1966ல் சிறுசெய்தித் தாட்களின் விசாரணைக்குழு (Small News Paper Enquiry Committee) தனது அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையில் கண்ட பரிந்துரைகளை அரசு செயல்படுத்தி, இதழ்களின் வளர்ச்சிக்கு துணை செய்தது.

நாட்டு விடுதலைக்குப் பின் ஆங்கில இதழ்களும், தாய்மொழி இதழ்களும் செழித்து வளர்ந்துள்ளன. இதழ்களின் வெளியீட்டு முறையிலும் பக்க அமைப்பிலும், நாட்டின், உலகத்தின் செய்திகளை வெளியிடும் விரைவிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. செய்திகளை வழங்கும் நிறுவனங்களும் வளர்ந்துள்ளன.

இப்பொழுது சில முன்னனி இதழ்கள் புலனாய்வு (Investigative), ஆழ்ந்த செய்திகளை வெளியிடுதல் (In-death reporting) ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றன.

தற்கால இதழ்களை மதிப்பீடு செய்யும் வகையில் ரெங்கசாமி பார்த்த சாரதி, “எழுதுவதிலும், செப்பனிட்டுப் பதிப்பிப்பதிலும் வழங்குகின்ற முறையிலும் தொழில் நுட்ப முறைகளையும், எந்திரங்களையும் பயன்படுத்தி செய்தித் தாட்களை உற்பத்தி செய்வதில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது” என்று கூறுகிறார்.

இந்திய இதழ்கள் பொறுப்பினை உணர்ந்து துணிச்சலோடு தரத்தை உயர்த்திக் கொண்டு செயல்பட்டால் ஒளிமயமான எதிர்காலத்தைக் காணலாம்.

## தமிழ்நாட்டில் அச்சுக்கலை

1708இல் சீகன்பால்கு என்பவர் பைபிளைத் தமிழில் அச்சிட அச்சுப் பொறி, தாள், எழுத்து ஆகியவற்றை ஜெர்மனியில் இருந்து தமிழ்நாட்டில்

தரங்கம்பாடியில் இறக்குமதி செய்தார். பின்னர் இங்கேயே தாள் தயாரிக்க 1713இல் பொறையாறு அருகில் தாள் ஆலை ஒன்றை நிறுவினார். இந்தியாவில் நிறுவப்பட்ட முதல் 'தாள்' ஆலை இதுதான்.

1713இல் சீகன்பால்கு அச்சுவார்ப்பட சாலை ஒன்றையும் நிறுவினார். இந்தியாவின் முதல் அச்சு வார்ப்பட சாலையும் இதுதான். இப்பொழுது தமிழ் நாட்டில் காணப்பெறும் 'சேசாயி தாள் ஆலை' மிகப்பெரிய ஒன்றாகும்.

தமிழ்நாடு அரசு தொடங்கியிருக்கும் புகளூர் ஆலைக்குத் தனிச் சிறப்பு உண்டு. கரும்புச் சக்கையை முழுக்க முழுக்கப் பயன்படுத்தி இதழ்தாள் தயாரித்த உலகின் முதன் முதல் ஆலை இதுவாகும்.

## அச்சும் பதிப்பும்

அச்சுக் கலையின் தோற்றம் மரஎழுத்துக்களாகும். இவ்வெழுத்துக்கள் முதலில் சீனாவில் தோன்றின. தொடக்ககாலத்தில் ஒரு பக்கம் முழுவதையும் மரப்பலகையில் செதுக்கினார்கள். அதன்மீது மை தடவி தாளை வைத்து அழுத்தி அச்சடித்தனர். அழுத்தப்பட்டதால் தாள் 'பிரஸ்' (அழுத்துதல்) என்ற பெயர் ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் 1812இல் முதன்முதலாகத் திருக்குறள் அச்சிடப்பட்டது. இந்த மர எழுத்துகள்தாம் பயன்படுத்தப்பட்டன.

கி.பி. 1041இல் பிசெங் என்ற சீனக்காரர் களிமண் எழுத்துக்களைப் படைத்தார். அந்த எழுத்துக்களை நெருப்பில் சுட்டு தகடு சுற்றி, கெட்டிப் படுத்தினார். ஏடுகள் அச்சிட இந்த எழுத்துக்களைப் பயன்படுத்தின.

கி.பி.1450இல் 'கூடன்பர்க்' என்ற ஜெர்மானியர் எழுத்துக்களை வார்த்தார். களிமண் எழுத்தகளின் தொடர் வளர்ச்சிதான் இது என்றாலும் அதைவிட உறுதியானது; பலமுறை பயன்படுத்தக் கூடியது. கணிம அச்சுக்கு ஏற்ப, புதிய மை ஒன்றையும் கூடன்பர்க் தயாரித்தார்.

## வண்ண அச்சு

கி.பி. 1457இல் 'கோப்லர்' என்ற ஜெர்மானியர் கனிம 'சால்டர் என்ற இறைவணக்கப் பாடல் நூலை வண்ணத்தில் அச்சிட்டார். வண்ண அச்சுக்கு முதலில் செம்புத் தகடுகளைப் பயன்படுத்தினார். பின்னர் கல்லைப் பயன் படுத்தினார். கல்லில் பொறிக்க ஒருவித இராசாயணக் கலவையை 'செனபெல்டர்' உருவாக்கினார். அதற்கு 'இரசாயண அச்சு' எனப் பெயரிட்டார். ஆனால் கல்லச்சு (லித்தோ) என்ற பெயர் நிலைபெற்றுள்ளது. 'லித்தோ' என்ற கிரேக்கச் சொல்லுக்கு கல் என்பது பொருளாகும்.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில், அச்சிடக் கல் எழுத்துக்களும் கல்லில் செதுக்கிய படங்களும் பயன்படுத்தப்பட்டன என்ற செய்தி 'சரசுவதி மகால் – ஓர் அறிமுகம்' என்னும் நூலில் காணப்பெறுகின்றது.

Scanned by CamScanner

### உருள் அச்சு

'வில்லியம்சு நிகல்சன்' என்பவர் 1790இல், படுக்கை அச்சில் தாளை அழுத்த இரும்பு உருளைகளை அமைத்தார். அச்சுப் பலகை மீது தாளை வைத்து, தட்டையாக அழுத்தி அச்சிடுவதற்குப் பதில் உருளைக் கொண்டு தாளை அழுத்தி அச்சிடும் முறைக்கு உருளை (சிலிண்டர்) அச்சு என்று பெயர்.

1822 வரை அச்சு எழுத்துக்களைக் கையால் கோர்த்துக் கொண்டிருந்தனர். இதே ஆண்டில் சர்ச்சு என்பவர் அச்சுக் கோர்க்கும் எந்திரத்தைக் கண்டு பிடித்தார்.

### சுழல் அச்சு

1827இல் அப்பலிகாத், கவ்பர் என்ற இரு ஆங்கிலேயர்கள் சுழல் அச்சு (ரோட்டரி) ஒன்றை அமைத்தார்கள். இதில் அச்சுப் பகுதி, அழுத்துப் பகுதி இரண்டும் உருளைகளாகச் செய்யப்பட்டு இயங்கின. ஆனால் இவருக்கு முன்னர், 'இராபர்டுசோ' என்ற அமெரிக்கர் ஒருவரும் சுழல் அச்சுமுறையை உருவாக்கியிருந்தார். இதனைத் தொடர்ந்து 1865இல் 'வில்லியம்சு புல்லக்' என்ற அமெரிக்கர் இருபுறமும் அச்சிடும் சுழல் அச்சுப் பொறியை அமைத்தார்.

### கல்லச்சுப் புத்தகங்கள்

1875இல் 'ஆட்மர்' என்ற செர்மானியர் அச்சுக் கோர்க்கும் பொறியைக் கண்டுபிடித்தார். கி.பி. 1875இல் புதுவையில் அச்சான பிரெஞ்சு–தமிழ் அகர முதலியில் உள்ள நூல் விலைப் பட்டியலில் 'கல்லச்சுப் புத்தகங்கள்' என்று தனிப்பட்டியல் காணப்படுகின்றது.

'ஞான ஆறுதல்' 'திங்கட்கிழமை புதுமை' முதலான எட்டுத் தமிழ் நூல்களும், எட்டுத் தமிழ் – பிரெஞ்சு நூல்களும் இந்தப் பட்டியலில் காணப் படுகின்றன. இந்த அகர முதலியும் கல்லச்சில் அச்சிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 'பார்கலே' என்ற ஆங்கிலேயர் கல்லுக்குப் பதில் கனிமத்தகடு பயன்படுத்தி அச்சிட்டார்.

### மோனோடைப்

1887இல் வான்சுடன் என்ற அமெரிக்கர் தனித்தனி எழுத்தாக வார்க்கும் 'மோனோடைப்' முறையைக் கண்டுபிடித்தார். 'லெட்லோ' முறை இதற்குமுன் வந்தவையாகும்.

### துணி அச்சு (Screen Prining)

சல்லடை போன்ற துணியில் – குறிப்பாகப் பட்டுத் துணியில் எழுத்து, படங்களைப் பொருத்தித் துணி வழியாக மையைத் தெளித்து அச்சிடும் முறைக்குத் துணி அச்சு (Screen Printing) என்று பெயர். அட்டை, துணி, பிளாஸ்டிக், கண்ணாடி, வெள்ளைக் களிமண், தோல் என்று எதன்மீதும் இம் முறையில் எளிதில் அச்சிடலாம். ஒட்டுப்படங்கள் (Stickers) இம்முறையில் அச்சிடப்படுகின்றன.

Scanned by CamScanner

**சைக்ளோஸ்டைல்** (Cyclostyles)

இத்தகைய அச்சுப் பொறிகளைச் சிறிய இதழ்கள் பயன்படுத்துகின்றன. கோவை, ஈரோடு, திருப்பூர், டெல்லி முதலிய இடங்களில் நாள்தோறும் கடைவீதி (மார்க்கெட்) விலை விபரங்கள் தெரிவிக்கும் நாளிதழ்கள் வெளியிடப் படுகின்றன.

Scanned by CamScanner

## செய்தித்தாளின் தோற்றம்

ஆதிகாலத்தில் செய்கைகள், ஒலிகள் மூலம் செய்திகளை வெளிப்படுத்தினர். பேச்சுமொழி வளர வளர, செய்திகளைச் செவி வழி வெளிப்படுத்தினர். எழுத்து மொழி வளர ஓவியங்களின் மூலம் செய்திகளை தெரிவித்தனர்.

ரோம் நாட்டு அரசர் ஜூலியஸ் சீசர் 'இதழியலின் தந்தை' என அழைக்கப்படுகிறான். கி.மு.60இல் அரண்மனைச் செய்திகளை 'ஆக்டா டைர்னா' என்ற பெயரில் எழுதிப் பொது இடங்களில் வைத்தார். போரில் ஈடுபட்டிருந்த பொழுது, போர்ச் செய்திகளைத் தெரிவித்தும் வந்துள்ளார்.

சீசருக்கு முன்பே கி.மு.106இல் சிசரோ என்பவர், பிறப்பு இறப்பு விவரங்களைத் தனது அரண்மனைக்கு முன்னால் பலரும் பார்க்க வைத்தாரென்றும் அதனால் அவரையே இதழியலின் முன்னோடியாகக் கருத வேண்டும் என்று சிலர் குறிப்பிடுகின்றனர்.

நமது நாட்டில் அசோகரின் கல்வெட்டுகளை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம். புத்தமதக் கொள்கைகளையும், அரச கட்டளைகளையும் பரப்புவதற்குக் கல்வெட்டுகள் பயன்பட்டன.

கி.பி.எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் 'பீசிங்கெசட்' என்ற மரத்தால் செய்த அச்சுக் கருவிகளைக் கொண்டு பத்திரிகை வெளியிடப்பட்டதனை ஆராய்ச்சியாளர்கள் 'முதல் பத்திரிகை' முயற்சியாகக் கருதுகின்றனர்.

## காகிதமும் அச்சுக்கலையும்

இதழியல் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிபவை காகிதமும் அச்சுக் கலையுமாகும். கி.பி. 105இல் மல்பெரி மரப்பட்டையிலிருந்து சாய்லன் என்ற சீனாக்காரர் முதன்முதலாகக் காகிதம் செய்வதைக் கண்டுபிடித்தார். சீனர்களோடு வாணிபம் புரிந்த பிற நாட்டார் காகிதம் செய்யும் கலையைக் கற்றனர். கி.பி.795இல் அரேபியர்கள் பாக்தாத்தில் காகித ஆலையை நிறுவினர். அச்சுக்கலையும் முதலில் சீனாவில்தான் தோன்றியது. மர. எழுத்துக்களை எழுதி அவற்றில் மை தடவி தாளில் அழுத்தி அச்சிட்டனர். அச்சகத்திற்கு 'பிரஸ்' என்ற பெயர் வந்ததும் இதனாலேயே, கி.பி. 1041இல் பிசெங் என்னும் சீனர், களிமண்ணில் எழுத்துகளைச் செய்து, சுட்டு தகடு சுற்றி, கடினப்படுத்தி அச்சிடும் முறையைக் கொண்டு வந்தார். அதன் பின்பு அச்சுக்கலையில் புரட்சி ஏற்பட்டது.

Scanned by CamScanner

கி.பி. 1450இல் ஜான் கூடன்பர்க் என்னும் ஜெர்மானியர் முதன் முதலில் அச்சுப் பொறியினைக் கண்டுபிடித்தார். இதன் பின்பே அச்சுப் பொறிகளின் துணையோடு உலகெங்கும் செய்தித் தாள்கள் வெளிவரத் தொடங்கின.

## அச்சிட்ட இதழ்கள்

ஜெர்மனியில் தான் முதன்முதலில் அச்சிட்ட இதழ்கள் வெளியிடப் பட்டன. செய்தித்துண்டு வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

முதன் முதலில் முறையாக, தொடர்ந்து வெளிவந்த இதழ் என்ற பெருமை, 'உறவு' என்ற இதழையே சேரும். 1609இல் ஜெர்மனி ஸ்ட்ராஸ்பர்க் நகரத்தில் இதை வெளியிட்டனர். ஜெர்மனியைத் தொடர்ந்து இங்கிலாந்து, பிரான்சு, ஹாலந்து போன்ற நாடுகளிலிருந்தும் அச்சிட்ட இதழ்கள் வெளிவரத் தொடங்கின.

கி.பி.1621 முதல் இங்கிலாந்தில் செய்தித்தாள்களை வெளியிட்டனர். 'கொரான்டோ' என்பது தனிச் செய்திகளாக வெளியிடப்பட்டது. 1665இல் வாரம் இருமுறை வரும் செய்தி இதழாக 'ஆக்ஸ்போர்டு கெசட்' வெளியிடப்பட்டது. 1702–இல் முதன்முதலில் நாள்தோறும் வெளிவரும் செய்தித்தாளாக 'தி டெய்லி கோரன்ட்' வெளியிடப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் முதல் செய்தித்தாள் 1690–இல் வெளியிடப்பட்டது. முதல் அமெரிக்க செய்தி இதழை ஜான்கேம்ப்ஸ் பெல் என்பவர் 'பாஸ்டன் செய்திக் கடிதம்' என்ற பெயரில் வெளியிட்டார். 1783–இல் முதல் அமெரிக்க நாளிதழ் வெளியிடப்பட்டது. ருஷ்யாவில் 1703–இல் இதழ்கள் வெளியிடத் தொடங்கியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## மூலங்கள்

இந்திய இதழியலுக்கு மூலம் பேரரசர் அசோகரின் கல்வெட்டுகள். இந்திய இதழியலின் முன்னோடி அசோகரே. இவரைப் பின்பற்றி இந்திய அரசர்கள் கல்வெட்டுகளின் மூலம் செய்திகளை மக்கட்குத் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் அச்சு இயந்திரம்

முதல் அச்சகம் தமிழ் நாட்டில் தரங்கம்பாடியில் 1713இல் அமைக்கப் பட்டது. 1715இல் பொறையாறில் முதல் காகித ஆலையை அமைத்தனர்.

## முதல் செய்தித்தாள்

கி.பி. 1780ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் நாள் முதல் இந்தியச் செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் கல்கத்தாவிலிருந்து வெளியிட்டார். அதன் பெயர் 'வங்காள கெசட் அல்லது கல்கத்தா பொது விளம்பரத்தாள்' என்பதாகும். அகஸ்டஸ் ஹிக்கி இந்திய இதழியலின் தந்தை எனப் போற்றப் படுகிறார். 'எல்லாப் பிரிவினருக்கும் உரிய அரசியல், வாணிப இதழ் யாராலும் ஊடுருவ இயலாதது' என இதைப் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.

Scanned by CamScanner

... இருப்பதைக் காணலாம்.

## மூலங்கள்

இந்திய இதழியலுக்கு மூலம் பேரரசர் அசோகரின் கல்வெட்டுகள் முகம்மதிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் செய்தித் தொடர்புகளை முறைப்படுத்தினர். செய்தி எழுத்தாளர்கள் என்ற தனிப்பிரிவினர் ஏற்பட்டனர். இவர்களுக்கு ஔரங்கசீப் மிகவும் சுதந்திரம் அளித்திருந்தார். இவர்களைப் பற்றிய குறிப்புகள் இந்தியாவில் பணியாற்றிய பிரெஞ்சு மருத்தவர் பிராஸ்கோ பெர்னியர் என்பவரால் எழுதி வைக்கப்பட்டுள்ளன. கிழக்கிந்திய நிறுவனரும் செய்தி எழுத்தாளர்களைப் பயன்படுத்தி இங்கிலாந்து அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டனர்.

## முதல் முயற்சி

முதல் அச்சகம் தமிழ்நாட்டுத் தரங்கம்பாடியில் 1713இல் அமைக்கப் பட்டது. 1715இல் பொறையாற்றில் முதல் காகித உற்பத்தி ஆலையை அமைத்தனர்.

## முதல் செய்தித்தாள்

கி.பி. 1780ஆம் ஆண்டு ஜனவரி 29ம் நாள் முதல் இந்தியச் செய்தித் தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் கல்கத்தாவிலிருந்து வெளியிட்டார். ஹிக்கியின் இந்த இதழ் 12"X18" அளவில் இரு தாள்களைக் கொண்ட ஆங்கில வார இதழாகும். இதன் உள்ளடக்கம் இங்கிலாந்து பத்திரிகையில் வெளியிடப் பட்ட சில செய்திகள், விளம்பரங்கள், கிழக்கிந்திய அலுவலர்களின் வாழ்க்கை ஆகியன. இந்த இதழுக்கு ஆளுநராக இருந்த வாரன் ஹேஸ்டிங் தடை விதித்தார். நீதிமன்றத்தால் வழக்கு தொடரப்பட்டு ஹிக்கி சிறையில் அடைக்கப்பட்டு அங்கிருந்தவாறு இதழை நடத்தினார். தனது செல்வமெல்லாம் இழந்து வறுமையில் வாழ்ந்தபோதும் அவர் வளைந்து கொடுக்கவில்லை. இதழியலாளர் ஒருவர் எப்படி வீரத்தோடும் சுதந்திர உணர்வோடும் செயல்பட வேண்டும் என்பதற்கு ஹிக்கி எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

Scanned by CamScanner

பெர்னார்டு மெஸ்சிங், பீட்டாரீடு என்ற இரு ஆங்கிலேய வணிகர்கள் கி.பி. 1780இல் 'இந்தியா கெசட்' என்ற இதழை தொடங்கினார்கள். தலைமை ஆளுநரின் அனுமதி பெற்றே இதழைத் தொடங்கினர். அரசின் ஆதரவோடு 1784இல் "கல்கத்தா கெசட் வெளியிடப்பட்டது. அடுத்து 'வங்காள ஜெர்னல்', 'ஓரியண்டல் மேகசின்' அல்லது 'கல்கத்தா அம்யூஸ்மென்ட்' 'கல்கத்தா கிரானிகிள்' என்பவை வெளியிடப்பட்டன.

## சென்னையில் இதழ்கள்

1785 அக்டோபர் 12இல் சென்னையிலிருந்து ரிச்சர்டு ஜான்சன் என்பவர் 'சென்னை கூரியர்' என்னும் ஆங்கில வார இதழை அரசின் ஆதரவோடு வெளியிட்டார். இதுவே சென்னையின் முதல் இதழ். 1791இல் ஹார்கரு என்ற இதழ் ஹயூக்பாய்டு என்பவரால் வெளியிடப்பட்டது. 1795இல் வில்லியம்ஸ் என்பவர் 'சென்னை கெசட்'டையும் ஹாம்பரீஸ் என்ப்வர் 'இந்தியன் ஹெரால்டு என்ற இதழையும் நடத்தினர்.

## பம்பாய் இதழ்கள்

பம்பாயில் முதன்முதலாக 1789இல் 'பம்பாய் ஹெரால்டு' வெளியிடப்பட்டது. 1790இல் லூக் ஆஸ்பர்னர் 'பம்பாய் கூரியர்' என்னும் இதழை நடத்தினார். இந்தியரால் நடத்தப்பெற்ற முதல் இதழ் 1815இல் வெளியிடப்பட்டது. அதன் பெயர் 'வங்காள கெசட்' என்பதாகும். இதனை கங்காதர் பட்டாச்சார்யா ஆங்கில வார இதழாக நடத்தினார். 1818இல் கார்டியன் திக்–தர்சன், சமார்சார்தர்பன் போன்ற இதழ்கள் வெளியிடப்பட்டன. ஜேம்ஸ் சில்க் பக்கிங்காமும், இராஜாராம் மோகன்ராயும் அன்றைய மிகப்பெரிய இதழாசிரியர்களாவர்.

## தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம்

லார்டு லிட்டன் இதழ்களைக் கட்டுப்படுத்த 1878இல் தாய்மொழிப் பத்திரிகை சட்டத்தைக் கொண்டு வந்தார். இந்திய இதழாசிரியர்கள் இந்த அடக்குமுறை சட்டத்தை எதிர்த்தனர். லிட்டன் பிரபுவுக்குப் பிறகு ரிப்பன் பிரபு 1882இல் இந்திய இதழ்களுக்கு அதிக உரிமையை அளித்தார்.

## இந்திய தேசிய காங்கிரஸ்

1885இல் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. இதழ்களுக்கு காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் கட்சிக்கு இதழ்களும் உதவி புரிந்தன. சென்னையில் 'இந்து', சென்னைமெயில்' என்னும் இரு ஆங்கில இதழ்கள் தோன்றின. வீரராகவாச்சாரி, சுப்ரமணிய ஐயர் போன்றோர் தமிழகத்தில் இதழியல் வளரப் பாடுபட்டவராவர்.

## இந்திய விடுதலை இயக்கமும் இதழ்களும்

மராட்டிய மொழியில் 'கேசரி' என்னும் இதழையும், ஆங்கிலத்தில் 'மராட்டா' என்னும் இதழையும் விஷ்ணு கிருஷ்ணசிப்லாங்கர் தொடங்கினார். இவற்றை பாலகங்காதார திலகர் பின்னர் ஏற்று நடத்தினார். 1887இல் கோபால கிருஷ்ண கோகலே சர்வஜன சபையின் காலாண்டு இதழையும், கதாரக் என்ற ஆங்கிலேயே மராத்திய இதழையும் நடத்தினார்.

Scanned by CamScanner

## கெடுபிடிச் சட்டங்கள்

1980 ஜூனில் ஏற்படுத்தப்பட்ட செய்தித்தாள் சட்டம் 7 இதழாசிரியர்கள் மீத நடவடிக்கை எடுக்க உள்ளூர் ஆட்சியாளர்களுக்கு அதிகாரமளித்தது. இதன்படி 9 பத்திரிகைகள் மீது அரசு நடவடிக்கை எடுத்தது. ஏழு பத்திரிகை களை அரசு கைப்பற்றியது. 1910 ஆம் ஆண்டில் 'இந்திய இதழியல் சட்டம்' என்ற சட்டத்தின்மூலம் இந்திய இதழ்களை ஒடுக்கினர்.

## எதிர்நீச்சல் வளர்ச்சி

திலகரின் 'கேசரி', அரவிந்தரின் 'வந்தேமாதரம்' பூபேந்திரநாத் தத்தாவின் 'ஜுசுந்தர்', உபாத்யாயாவின் 'சந்தியா', மௌலானா முகமது அலியின் 'காம்ரேட்', அபுல்கலாம் ஆசாத்தின் 'அல்—ஹிலால்', வி.எஸ்.சீனிவாச் சாரியாரின் 'செர்வன்ட் ஆப் இந்தியா' ஆகிய இதழ்கள் துணிச்சலோடு உரிமை வேண்டித் தொடர்ந்து போராடியவையாகும்.

## காந்தியக் காலம்

காந்தியடிகள் 'யங் இந்தியா', 'அரிஜன்', 'நவஜீவன்' ஆகிய இதழ்களை உயர்ந்த குறிக்கோள்களோடும், தரத்தோடும், அறத்தோடும் நடத்தினார்.

Scanned by CamScanner

## இதழ்கள் தோற்றம்

முதன் முதல் தமிழ்மொழியில் இடம்பெற்ற பத்திரிகை 'சிலோன்கெசட்' என்பதாகும். இது 1802 இல் தொடங்கப்பட்டது. சென்னையில் இருந்த கிறிஸ்தவ சமயப் பிரசாரக் கழகம் 1831–ல் தமிழ்ப்பத்திரிகை என்ற செய்தி இதழை வெளியிட்டது. இது தான் தமிழில் வெளிவந்த முதல் செய்தி இதழாகும். இதற்குப் பின் 1833–இல் விருந்தாந்தி எனும் இதழும், 1835–ல் 'மெட்ராஸ் கிரானிக்கல்' எனும் இதழும் 1855இல் 'இராஜவர்த்தினி' எனும் மாத மும்முறை இதழும் வெளியிடப்பட்டன. 1852இல் தினவர்த்தமானி எனும் முதல் தமிழ்க் கிழமை இதழை வெளியிட்டனர். இது தமிழ் மக்களிடையே நல்ல செல்வாக்குப் பெற்றது. வாரந்தோறும் சுமார் 784 படிகளுக்கு மேல் செலவழிந்தது. இதே காலத்தில் 'சுதேசாபிமானி' என்ற இதழும் நடைபெற்று வந்தது.

1841இல் தொடங்கிய 'உதயதாரகை' எனும் மாத இருமுறை இதழ்தான் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த முதல் தமிழ் இதழாகும். 1848இல் கொழும்பு நகரில் 'இலங்கை நேசன்' என்ற மாத இதழ் வெளிவந்தது. 1859இல் யாழ்ப்பாணத்திலிருந்து 'பாலியர் நேசன்' எனும் இதழ் வெளியாயிற்று. 'சத்தியவேத பாதுகாவலன் 1876இல் கிறித்துவ இதழும், 'இந்து சாதனம்' எனும் பெயரில் 1889இல் சைவசமய இதழும் யாழ்ப்பாணத்தில் தோன்றின.

மலேயாவில் இந்து நேசன், பினாங்கு விஜய சேதனம், பினாங்கு வர்த்தமானி, தேசாபிமானி போன்ற இதழ்களும், சிங்கப்பூரில் சிங்கை நேசன், கோலாலம்பூரில் தமிழ்நேசன், போன்ற இதழ்களும் வெளியாகியுள்ளன.

## கிறித்துவ இதழ்கள்

1875 – சிநேகபோதன், ஆர்.ஆர்.எமடோஸ், பாளையங்கோட்டை

1890 – வேதவிளக்கன், டி.வேதநாயகம், சென்னை

1929 – வேதபோதமாத தோழி, ஹர்வுட், சென்னை

1950 – புத்துயிர், எஸ்.தேவஇரக்கம், பாளையங்கோட்டை

## இந்துமத இதழ்கள்

1883 – இந்துமத சீர்திருத்தி, கே.ஆறுமுகம் பிள்ளை, பாளையங்கோட்டை

1912 – சித்தாந்தம், பூவை கலியாணசுந்தரமுதலியார், சென்னை

1914 – திராவிட பாகவ்தன், டி.கே.சீனிவாசஅய்யங்கார், சென்னை

1918 – இராமாநுஜன், ஸ்ரீரங்காச்சாரி, உடையார்பட்டி

1927 – சமரசமார்க்கம், எஸ்.சாமிநாதய்யர், சென்னை

1929 – மாதவமித்திரன், பி.ரங்காச்சாரியார், கும்பகோணம்

## இஸ்லாம் இதழ்கள்

1909 – இஸ்லாம் நேசன், சுல்தான் சையத் அஹமத்ராவுத்தர், மதுரை

1921 – தத்துவ இஸ்லாம், நாச்சியார் கோயில் முஸ்லீம் சங்கம்

1922 – தாருல் இஸ்லாம், ப.தாவுத்ஷா, நாச்சியார் கோயில்

Scanned by CamScanner

## ஜைன இதழ்கள்

1918 – தருமசீலம், தி. ஆதிநயினார், சென்னை

## சமூக இதழ்கள்

சமயப் பத்திரிகைகளுக்கு அடுத்தபடியாக விரைந்து வளரத் தொடங்கிய பத்திரிகைகள் சமூகப் பத்திரிகைகளாகும். ஒவ்வொரு சமூகமும் பிற சமூகங்களைக் காட்டிலும் தமது சமூகமே உயர்ந்தது என்பதைச் சுட்டிக் காட்ட பத்திரிகைகளை கருவிகளாக தேர்ந்தெடுத்தன. எனவே புதிய புதிய சமூகப் பத்திரிகைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவை எண்ணிக்கையில் மிகுந்தன. எனினும் போதுமான வரவேற்பும், நிதி ஆதாரமும் இன்மையால் சிறிது காலத்தில் நின்றுவிட்டன.

## சமய சமூக இன இதழ்கள்

1909 – விவேக போதினி

1912 – வன்னியகுல ஷத்திரிய தீபம்

1913 – விஸ்வகர்மன்

1914 – நாட்டுக்கோட்டை வைசியம்

1918 – பரதபோதினி

1921 – செங்குந்தன்

1922 – குகவேளாளர்

1923 – மறவர்குல தூதன்

1923 – வைசியன்

1924 – இந்திரகுல போதினி

1924 – தீனபந்து, வணிகமித்திரன்

1925 – ப்ராம்மணன்

1926 – கருணீகமித்திரன்

1929 – ரெட்டிகுலராணி, யாதவமித்திரன்

1930 – அகம்படியார் குலசேகரன்

1952 – சௌராஷ்டிரமணி

1955 – ஆயிரவைசியன் போன்ற இதழ்கள்

பல சமூக சமய பத்திரிகைகளின் பின் விளைவாகத்தான் தமிழ் நாட்டில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படத் தொடங்கியது. இந்திய பத்திரிகைகள் 1867ஆம் ஆண்டு வரையில் பெரும்பாலும் இலக்கியம், சமயம், சமூகம் போன்ற எல்லைக்கோட்டுக்குள்ளேதான் சுற்றிச் சுற்றி வலம் வந்துள்ளன. 1857இல் ஏற்பட்ட சிப்பாய் கிளர்ச்சிக்குப் பின்னர்தான் இந்தியாவில் அரசியல் ஆர்வமும், எழுச்சியும் நாடு முழுவதும் பரவலாயிற்று. அயல் ஆட்சியை நீக்கி

Scanned by CamScanner

## திராவிட இயக்கத்தில் இதழ்களின் பங்கு

தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன் முதலாக, 1920ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற இயக்கம் திராவிடர் இயக்கமாகும். தமிழ்நாட்டில் மக்களாட்சி முறையைத் தொடங்கி வைத்த இயக்கமும் இதுவேயாகும். 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சியின் ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெற்றது. விடுதலைக்குப் பிறகு 1967 முதல் தமிழ்நாட்டில் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் அரசுகள் அனைத்தும் திராவிட இயக்கத்தை சார்ந்தவைகளே.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை, இளைத்துப் போயிருந்த இன்பத் தமிழுக்குப் புத்துயிரூட்டி, அணிகள் பூட்டி. அழகுபடுத்தியவர்கள் திராவிட இயக்கத்தைச் சார்ந்த எழுத்தாளர்களே. இதற்கு இவர்களுக்கு உறுதுணையாக இருந்தவை ஏடுகளும், மேடைகளுமேயாகும்.

## திராவிடர் சங்கம்

'சென்னை ஒன்றிய சங்கம்' (மதராஸ் யுனைடெட்லீக்) என்ற அமைப்பை 1912இல் ஏற்படுத்தினார். இதற்கு ஆதரவு அளித்தவர் டாக்டர் சி.நடேசனார். 1913இல் இச்சங்கம் 'திராவிடர் சங்கமாக' பெயர் மாற்றம் பெற்றது.

அரசு பதவிகளில் மட்டுமல்லாது அரசியலிலும் பங்குபெற வேண்டும் என்ற நோக்கத்தில் 1916இல் சென்னையில் முப்பது தலைவர்கள் ஒன்றுகூடி. 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற அமைப்பை நிறுவினர். இவர்களுள் எத்திராசு, டாக்டர் நடேசனார், டாக்டர் டி.எம்.நாயர், சர்.தியாகராயர் முதலியோர் முக்கியமானவர்கள் இச்சங்கத்தின் செயலராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர் சர்.தியாகராயர்.

1917 பிப்ரவரி 25இல் ஐஸ்டிஸ் என்ற ஆங்கில நாளிதழை வெளியிட்டார்கள். இந்த இதழின் பெயரே, கட்சியின் பெயராகவும் புகழ் பெற்றது. இவர்கள் தமிழில் வெளியிட்ட நாளிதழ் 'திராவிடன்' என்பதாகும். இது 1917ஜுன் 1ஆம் நாள் வெளியிடப்பட்டது.

இத்தமிழ்த் தினசரிப் பத்திரிகையில் இராஜாங்க விஷயங்கள், விவசாய சமாச்சாரங்கள், வியாபார சங்கதிகள், கைத்தொழில் விஷயங்கள், வித்யா சம்பந்தமான சங்கதிகள், தந்தி செய்திகள் போன்றவைகளையும் அளித்து வந்தன.

## ஈ.வெ.ரா. பெரியாரின் இதழியல் பணிகள்

1-4-1928 முதல் 'திராவிடன்' நிர்வாகப் பொறுப்பைத் திரு.ஈரோடு ஈ.வெ.இராமசாமி நாயக்கர் அவர்கள் ஏற்றுக்கொண்டார் என்பதை அறியலாம். தமிழில் தோன்றிய இரண்டாவது நாளிதழ் 'திராவிடன்' தோன்றிய பொழுதே நாளிதழாகவே தோன்றிய முதல் தமிழ் நாளிதழ் என்ற சிறப்பு இதற்கு உண்டு. இதன் பின்னரே திரு.வி.க.வின் தேசபக்தன் (7.12.1917) பிறந்தான். தமிழர் உரிமையைக் காக்கவும், சாதி, சமய சீர்திருத்தத்திற்கும் முன்னோடியாகத் திகழ்ந்த இதழ் திராவிடன்.

Scanned by CamScanner

பெரியார் ஈ.வெ.ராவின் 'குடியரசு' இதழ் உலகில் மிகவும் பரபரப்பு ஏற்படுத்திய இதழ் ஆகும். கடவுள், சாதி, சமயம், மூடக்கொள்கைகள், போலி அரசியல், ஏற்றத்தாழ்வுகள், பொய்யான பழக்க வழக்கங்கள் அனைத்தையும் சாடுவதற்குக் குடியரசு பாரத மாதா படமும், மகாத்மா காந்தி 'வாழ்க' என்ற முழக்கமும் இடம் பெற்றன.

1924ல் 'குடி அரசு' வார இதழைப் பெரியார் தொடங்கினார். குடியரசு முதல் இதழ் 2.5.1925 அன்று வெளியிடப்பட்டது. 1933ல் குடி அரசு இதழ் தடை செய்யப்பட்டபின் 1934ல் புரட்சி என்ற இதழை தொடங்கினார். பின் அதற்கும் தடை விதிக்கப்பட்டது. பின் 'பகுத்தறி'வை ஆரம்பித்தார். இந்த இதழில்தான் முதன் முதலில் பெரியார் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார்.

1928இல் ரிவோல்ட் ஆங்கில வார இதழும், 1945இல் ஜஸ்டிசைட் என்ற ஆங்கில வார இதழும், 1971ல் 'மாடர்ன்' ரேஷனலிஸ்டு என்னும் ஆங்கில இதழை நடத்தினார். பின் 1970இல் 'உண்மை' என்னும் இதழை பெரியார் தொடங்கினார்.

## அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா விடுதலையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். விடுதலையில் பணியாற்றிய அனுபவம் அண்ணாவுக்கு சொந்தமாக இதழ் ஆரம்பித்த பொழுது பெரிதும் துணை புரிந்தது. 1942 மார்ச் 8ல் திராவிட நாடு இதழை அண்ணா தொடங்கினார்.

திராவிட நாடு அண்ணாவின் எழுத்தாற்றலை புலப்படுத்தியதோடு, தமிழ் உரைநடையையும் வளப்படுத்தியது, அழகுபடுத்தியது. அடுக்குமொழி என்ற புதிய உரைநடையை உண்டாக்கித் தந்தது. 'திராவிடநாடு' இதழுடன் 'காஞ்சி' என்ற வார இதழையும் அண்ணா நடத்தினார். 'நம்நாடு', 'மாலைமணி' என்னும் இதழ்களுக்கும் ஆசிரியராக இருந்தார். 'ஹோம்லாண்டு' என்ற ஆங்கில வார இதழையும் அண்ணா வெளியிட்டார்.

## முரசொலி

அந்நாளைய திராவிட இயக்க இதழ்களில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் மற்றொரு இதழ் முரசொலியாகும். இதன் நிறுவனர் ஆசிரியர் கலைஞர் கருணாநிதியாவார். பெரியாரின் 'குடி அரசு' இதழில் கருணாநிதி துணை ஆசிரியராகப் பணியாற்றி இருக்கிறார்.

கலைஞர் 'மறவன்மடல்', முத்தாரம் என்ற இதழ்களையும் நடத்தினார். கருணாநிதியின் எழுத்து காட்டாற்று வெள்ளம் போன்ற வேகம் நிறைந்தது. கத்தி வீச்சு போலக் கூர்மையானது.

## பிற இதழ்கள்

நாவலர் நெடுஞ்செழியன் 'மன்றம்' என்ற இதழை நடத்தினார். இது இலக்கிய நடையில் வெளியிடப்பட்ட இதழாகும்.

Scanned by CamScanner

1831 – 'தமிழ்ப்பத்திரிகை' திங்கள் இதழ். கிறிஸ்து சமயப் பத்திரிகை, தமிழில் முதன் முதல் வெளிவந்த பத்திரிகை.

1840 – 'பாலதீபிகை' சிறுவர்களுக்கான பத்திரிகை மூன்று மாதத்துக் கொருமுறை நாகர்கோவிலிலிருந்து வெளிவந்தது. 1852 வரையில் நடந்தது.

1841 – 'தற்போதகம்' பாளையங்கோட்டை சர்ச்சு மிஷன் அச்சுக் கூடத்தில் புதுப்பிக்கப்பட்டது.

1841 – 'ஜனரிசேகர்' சென்னையிலிருந்து மாதம் இருமுறை வெளியானது.

1841 – 'சுவிசேஷ பிரபாவ் விளக்கம்' நாகர்கோவிலிலிருந்து வெளி வந்தது.

1842 – 'தி அரோரா மாதம் இருமுறை வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை.

1845 – 'உதய தாரகை' இலக்கியம், கல்வி, சமயம் முதலியவற்றைப் பற்றிய கட்டுரைகள் இதில் வெளிவந்தன.

1849 – 'சிறுபிள்ளையின் தேசத்தோழன்' மூன்று மாதத்திற்கொருமுறை நாகர்கோவிலிலிருந்து வெளிவந்தது.

1854 – தமிழ் காலாண்டு ரெபாஸடரி மதுரையிலிருந்து அமெரிக்கன் மிஷன் வெளியிட்ட தமிழ் இதழ்.

1855 – தினவர்த்தமானி, இதை தொடங்கியவர் பெர்சிவல் பாதிரியார். இலக்கியம், விஞ்ஞானம் முதலிய கட்டுரைகளும் வெளிவந்தன. தமிழில் செய்திகளை வெளியிட்ட முதல் இதழ் இதுவாகும்.

1856 – 'மாவட்ட கெசட்' மாவட்டம் சம்பந்தப்பட்ட அரசாங்க அறிக்கைகளும், பஞ்சாங்கம், தட்பவெப்பநிலை, விலைவாசி முதலியவை இதில் வெளியிடப்பட்டன.

1857 – 'பாலியர் நேசன்' யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சிறுவர்களுக்கான வெளியீடு.

1859 – 'தர்மப்பள்ளி போதம்' நாகர்கோவிலிலிருந்து வெளியாயின.

1861 – 'தேசோபகாரி', திங்கள் இதழ் எஜுகேஷன் சொசைடி என்னும் சங்கத்தாரால் நெய்யூரிலிருந்து வெளியிடப்பட்டது.

1861 – 'த கேம்ப் ஆப் ட்ரூத்' என்னும் தமிழ் வெளியீட்டை சென்னை பீ.ஃரீ சர்ச் மிஷனைச் சேர்ந்த ரெவண்டு ஆர்.எம்.பாபு என்பவர் வெளியிட்டார்.

1863 – 'தென் திருவாங்கூர்' கிருத்துவ தூதன்டு இந்த ஆண்டில் வெளிவந்தது.

1864 – 'கற்பக விருட்சம்' இவ்விதழை சென்னை சாமுவேல்பிள்ளை நடத்தினார்.

Scanned by CamScanner

1864 – 'தத்துவ போதினி' சென்னை பிரம சமாஜத்தினால் நடத்தப் பட்டது. இந்துக்களால் நடத்தப்பட்ட முதல் இதழ் இதுவாகும்.

1865 – 'விவேக விளக்கம்' ஸ்ரீ பிரம சமாஜத்தினால் ஸ்ரீ தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

1865 – 'உதய தாரகை' யாழ்ப்பாணத்திலிருந்து வந்துள்ளது.

1865 – 'திருச்சபைப் பத்திரிகை' கிறித்துவ சமயப்பத்திரிகை எஸ்.சாமுவேல் பிள்ளை இதை நடத்தினார்.

1867 – 'தேசாபிமானி' கிருஸ்துவப் பத்திரிகை, சென்னையிலிருந்து வெளியாயிற்று.

1871 – 'ஞான பானு' இதன் விவரம் கிடைக்கவில்லை.

1871 – 'பிரம தீபிகை' சென்னையில் வெளியானது.

1874 – 'ஜன வினோதனி' திங்கள் இதழ் அரசாங்க ஆதரவு பெற்றவை.

1875 – 'சிநேக போதன்' கிறித்துவ பத்திரிகை.திங்கள் இதழ், பாளையங் கோட்டையிலிருந்து வெளியாயின.

1876 – ஞானபானு திங்கள் இதழ் செங்கல்வராய முதலியார் ஆசிரியராக இருந்தார்.

1877 – சித்தாந்த சங்கிரகம், சி.ராமராவ் இதன் ஆசிரியர்.

1879 – தத்துவ விசாரிணி

1879 – நடுத்தர உயர்தர பள்ளி நண்பன், ஆசிரியர் அண்ணாதுரை ஐயர்.

1880 – சுதேசமித்திரன் தினசரிப் பத்திரிகை

1881 – 'கலாநிதி' எஸ்.பி. நரசிம்மலு' நாயுடு சேலத்தில் நடத்தினார்

1882 – 'தத்துவ விவேசினி' பு.முனுசாமி நாயக்கர் இதன் ஆசிரியர்

1882 – 'சத்திய வேதக்கொடி' மாசிலாமணி இதன் ஆசிரியர்

1887 – 'ஜனோபகாரம்' ஆசிரியர் சி.சடையாண்டி செட்டியார்

1887 – கிராமப் பள்ளி ஆசிரியன், ஆசிரியர்.கோபாலையர்

1887 – மாதர் மித்திரி, சிங்கை நேசன், விவேக போதினி, லோகரஞ்சனி, திராவிட ரஞ்சனி, விவேகசுந்தரம், மகாராணி, உலகநேசன் போன்றவை ஆகும்.

1888 – இந்து நேசன், சன்மார்க்க போதினி

1883 – சுகுண் போதினி, இந்துமத சீர்திருத்தி

1884 – சத்திய வேதானுசாரம்

1886 – கலா தரங்கினி, லோக ரஞ்சினி

1889 – தீர்க்கதரிசன சுப்ரதீபிகை, பிரமவித்தியா

Scanned by CamScanner

## அலகு - 2

1. செய்தித்தாளின் தோற்றம் குறித்து எழுதுக.
2. லார்டு வெல்லெஸ்லி பிரபுவின் இதழ்களுக்கான ஒழுங்கு முறைகளைக் குறித்து எழுதுக.
3. இராஜாராம் மோகன்ராய் இதழியல் வளர்ச்சிக்குச் செய்த தொண்டுகளை எழுதுக.
4. திராவிட இயக்கத்தில் இதழ்களின் பங்கு யாது?
5. ஈ.வெ.ரா பெரியாரின் இதழியல் பணிகள் யாவை?
6. சுதேசமித்திரன் இதழின் சிறப்புகளை விளக்குக.
7. இந்தியா இதழின் சிறப்புகளை குறித்து எழுதுக.
8. திரு.வி.க வின் இதழியல் பங்களிப்பை விளக்கி எழுதுக.
9. 'சுதந்திர சங்கு' நாளிதழின் சிறப்புகளை விளக்குக.
10. இதழியலில் மணிக்கொடி இதழின் பங்களிப்பை விளக்குக.
11. பாரதியார், திரு.வி.க குறித்து எழுதுக.
12. சொக்கலிங்கம், சோ.ராமசாமியின் இதழியல் பங்களிப்பை எழுதுக.
13. தினத்தந்தி நாளிதழின் வளர்ச்சியை குறிப்பிடுக.

Scanned by CamScanner

14. திரைதொழும் இதழ்கள் குறித்து விளக்குக.
15. தற்காலத் தமிழ் இதழ்களின் எழுச்சி, வீழ்ச்சிகளை எழுதுக.
16. செய்தித்தாளின் தோற்றம் மற்றும் அச்சுக்கலையின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்து கட்டுரைக்க.
17. இந்திய இதழியல் குறித்து கட்டுரை வரைக.
18. இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்களின் பங்களிப்பை விவரி.
19. தமிழக இதழ்கள் குறித்து கட்டுரை வரைக.
20. தேசிய இதழ்கள் குறித்து விவரிக்க.
21. திராவிட இயக்க இதழ்கள் குறித்து விளக்குக.
22. பிற இயக்க இதழ்கள் குறித்து விரிவாக கூறுக.
23. விடுதலை இயக்க காலத்தில் தமிழ் இதழ்கள் பற்றி விவரி.
24. பழைய தமிழக இதழ்களை வகைப்படுத்தி எழுதுக.
25. புகழ்பெற்ற பத்திரிகையாளர்கள் குறித்து கட்டுரை வரைக

Scanned by CamScanner